**கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்**

**COS.No. 51 of 2025**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4ம் நாள் புதன்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | PW1–Mr.Madhukumar Rajangam | கிராமம்: | |
| த.பெ. | Mr.P.Rajangam | வேலை: | |
| வயது | 41 | செல்போன் எண் | |

**முதல் விசாரணை:**

**என் பெயர் மதுகுமார் ராஜாங்கம், வயது 41, த/பெ.P.ராஜாங்கம். நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். மேலும், என் தரப்பில் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டுகிறேன்.**

1) Power of Attorney dated 07.10.2024 – Original in Plaintiff custody

2) Certificate of Registration issued by RBI in favour of Plaintiff dated 09.06.2016 – Photo copy in Plaintiff custody

3) Sale Deed executed in favour of 1st Defendant vide Doc.No.515 of 1994 dated 10.02.1994 – Original in plaintiff custody

4) Loan Sanction – LA95087 & LA 95088 dated 14.07.2011 – Original in plaintiff custody

5) MODT executed by 1st Defendant in favour of Plaintiff vide Doc.No.6990 of 2011 dated 15.07.2011 – Original in plaintiff custody

6) Loan Agreement – LA95087 & LA95088 dated 15.07.2011 – Original in plaintiff custody

7) Loan Sanction – LA95316 dated 14.06.2012 – Original in plaintiff custody

8) Loan Agreement – LA95316 dated 15.06.2012 – Original in plaintiff custody

9) Order passed by the Hon'ble High Court in O.P.No.241 & 252 of 2017 dated 05.01.2021 – Web Copy in plaintiff custody

10) Statement of Account – LA95087 dated 29.08.2022 – Original in plaintiff custody

11) Statement of Account – LA95088 dated 29.08.2022 – Original in plaintiff custody

12) Statement of Account – LA95316 dated 29.08.2022 – Original in plaintiff custody

13) Reference Letter dated 24.06.2022 – Original in plaintiff custody

14) Reference Letter dated 27.12.2022 – Original in plaintiff custody

15) Order passed in Arb.OP(Com.DIV) No.448 of 2024 dated 12.03.2025 – Web copy in plaintiff custody

16) Encumbrance Certificate dated 09.07.2025 – Download Copy in plaintiff custody

17) Mediation report from the District Legal Services Authority dated 22.08.2025 – Original in plaintiff custody

வாதி நிறுவனத்தில் நான் பிராந்திய சட்ட மேலாளராக இருக்கிறேன். வாதி நிறுவனத்திற்காக அதிகாரம் பெற்றவர் என்ற முறையில் நான் இவ்வழக்கில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன்.

வாதி தரப்பில் மேற்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய பரிசீலிக்கப்பட்டது, பரிசீலிக்கப்பட்டு நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவணம் 2 புகைப்பட நகலாக இருந்ததால் குறியீடு செய்ய ஏற்கப்படவில்லை. மேலும் நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவணம் 8, 15 ஆகியவை உயர் நீதிமன்ற உத்தரவுகளாக இருந்ததால் குறியீடு செய்யப்படவில்லை. நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவணங்கள் 1, 3 முதல் 7, 9 முதல் 14 மற்றும் 16, 17 முறையே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

07.10.2024 தேதியில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது உங்களுக்கு அதிகார ஆவணம் கொடுக்கப்பட்டு நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கு 15.07.2011 மற்றும் 15.06.2012 ஆகிய தேதிகளில் ஒரு காலம் சென்ற R.O.பழனிச்சாமி என்பவர் வாங்கிய கடனை வசூல் செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான்.

01.02.2017 தேதியில் R.O.பழனிச்சாமிக்கு வழங்கிய கடனை recall செய்து ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டது, அந்த அறிவிப்பை இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

03.05.2014 தேதியில் CP 12/2014 மற்றும் CP 13/2014 என்ற இரண்டு arbitration மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தான் வாதி நிறுவனத்தில் நான் பணியில் இருந்து வருகிறேன், அதற்கு முன்னர் நடந்த விபரங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது.

இவ்வழக்கில் நான் ஆவணங்களின் அடிப்படையில் மட்டும் தான் சாட்சியம் அளிக்கிறேன்.

05.01.2021 தேதியில் உயர்நீதிமன்றம் O.P.No.241 மற்றும் 252/2017 ஆகிய மனுக்கள் மீது பிறப்பித்த உத்தரவிற்கு பின்னிட்டு அந்த உத்தரவுக்கு மேல்முறையீடாக நீங்கள் கடந்த 2024 ஆம் ஆண்டு Arb.O.P.(Com.Div.)No.448/2024 என்ற மனுவை மூன்று ஆண்டுகள் கழித்து தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மீண்டும் 21.06.2022 தேதியில் ஒரு Arbitration Proceedings ஒரு குமணன் என்ற நடுவரை நியமித்து வாதி நிறுவனத்தால் தொடங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

27.12.2022 தேதியில் அவர் சேவை terminate செய்யப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளீர்கள், அவரை நியமனம் செய்வதற்கோ அல்லது அவரை terminate செய்ததற்கோ உரிய ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தாக்கல் செய்யவில்லை.

05.01.2021 தேதியில் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்கு பின்னிட்டு 26.04.2024 தேதி வரையில் நீங்கள் நடவடிக்கைகள் ஏதேனும் எடுத்ததாக ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

R.O.பழனிச்சாமி இறந்தது 21.01.2025 என்பது உங்களுக்குத் தெரியும், அதை மறைத்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, அவர் இறந்தது தெரியும், எந்த தேதியில் இறந்தார் என்பது எனக்கு தெரியாது.

உயர் நீதிமன்றத்தில் உங்கள் நிறுவனத்திற்காக மனு தாக்கல் செய்த திருமதி.சரஸ்வதி என்பவர் தற்போது உங்கள் நிறுவனத்தில் தான் பணியில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு வாதி நிறுவனத்திற்கு எந்த முகாந்திரமும் இல்லை, ஒன்று இறந்து போனவர் மேல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, இறந்து போனவருக்கு யசோதா என்ற மகள் இருக்கிறார் அவரை வாரிசாக சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை, எனவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது தவறானது, நிலைநிற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

R.O.பழனிச்சாமி கடன் வாங்கிய பிறகு 14 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கிற்கு வழக்கு மூலமும் இல்லை, காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

இவ்வழக்கு தள்ளுபடி ஆகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

2, 3 பிரதிவாதிகள் இந்த வழக்குக் கடனிற்கு தொடர்புடையவர்கள் அல்ல, அவர்கள் இந்த வழக்கு கடனை செலுத்துவதற்கு எந்த வித சட்ட கடமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

வாதி நிறுவனத்திற்கு அடமானம் செய்து கொடுத்தவராக Ex.A.4 ஆவணப்படி திரு.R.O.பழனிச்சாமி பெயர் மட்டும் தான் இடம் பெற்றுள்ளது என்று சொன்னால் சரி.

நீங்கள் வழக்கில் தாக்கல் செய்துள்ள Ex.A.8, Ex.A.9, Ex.A.10 கணக்கு பட்டியல்கள் செல்லாதவை, அவை சரியானது அல்ல, வழக்கிற்கு ஏற்புடையதல்ல, அவை தவறானது என்று சொன்னால் சரியல்ல.

இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல, தள்ளுபடியாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/–K.Hariharan

Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.